

முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சென்னை பெருநகர வளர்ச்சி குழும கூட்டரங்கில், சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியுதவியுடன் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தால் ரூ.389 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ள சென்னை சென்ட்ரல் பகுதி மத்திய சதுக்கத் திட்டம் குறித்த ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசின் முதன்மை செயலாளர் ச.கிருஷ்ணன், சென்னை பெருநகர வளர்ச்சி குழும முதன்மை செயலாளர் ராஜேஷ் லக்கானி, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் ஆகியோர் கலந்து கொண்டனர்.